## மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

**முன்னிலை – திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,**
**மாவட்ட நீதிபதி**

**2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட்திங்கள் 11–ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2057 ஆடித் திங்கள் 26–ஆம் நாள்**

**அமர்வு வழக்கு எண்.326/2018–இல்**
**குற்றப் பல்வகை மனு எண். 01/2026**
**அழகாபுரம் காவல் நிலைய குற்ற எண் 434/2017**

**வடிவேல்,(வயது 63), த/பெ. சின்னகாளிச்செட்டி .. மனுதாரர்/எதிரி**

**–எதிர்–**

**தமிழ்நாட்டு அரசுக்காக**
**அழகாபுரம் காவல் நிலைய**
**காவல் ஆய்வாளர்,**
**சேலம் மாநகரம்.**
**குற்ற எண் 434/2017 ...எதிர்மனுதாரர்**

III rd ADJ Court, Salem

இந்த மனு இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரருக்காக வழக்குரைஞர் **திரு D. அய்யனார்** அவர்களும் எதிர்மனுதாரருக்காக அரசு தரப்பு கூடுதல் குற்றத்துறை வழக்குரைஞர் **திரு M.K.மணிகண்டன்** அவர்களும் தோன்றி எடுத்துரைத்த வாதங்களை கேட்டும் மனு, ஆட்சேபனை, வழக்குக் கோப்புகள் ஆகியவற்றைப் பரிசீலித்தும் இந்நாள்வரை நிலுவையில் இருந்த இந்த மனுவில் இன்று இந் நீதிமன்றம் ஆணை பிறப்பிக்கிறது.

## ஆணையுரை

அரசு தரப்பு 16-ஆம் சான்றாளரை குறுக்குவிசாரணை செய்வதற்காக மீண்டும் அழைத்து ஆணையிடக் கோரி பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதாவின் 348-ஆம் பிரிவின்கீழ் எதிரியால் இந்த மனு தாக்கல்செய்யப் பட்டுள்ளது.

## மனுவின் சுருக்கம்

01. மனுதாரர்/எதிரிக்கு எதிராக இந்த வழக்கில் இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் 294(b), 302 ஆகிய பிரிவுகளின்கீழ் தண்டிக்கத்தக்கக் குற்றங்களுக்காக குற்றம் சுமத்தப்பட்டு வழக்குவிசாரணை நடந்துவருகிறது. 16.06.2026-ஆம் தேதியன்று 21-ஆம் பட்டியல் சான்றாளரான புலனாய்வு அதிகாரிகளில் ஒருவரான குமார் அரசு தரப்பு 16-ஆம் சான்றாளராக சாட்சியமளித்தார். அவரை குறுக்குவிசாரணை செய்வதற்கான அறிவுறுத்தல் -களையும் ஆவணங்களையும் மனுதாரரால் தன் வழக்குரைஞருக்குக் கொடுக்க முடியவில்லை. அதனால் அன்று அரசு தரப்பு 16-ஆம் சான்றாளர் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

02. அரசு தரப்பு வழக்கைப் பொய்ப்பிக்க அரசு தரப்பு 16-ஆம் சான்றாளரை குறுக்குவிசாரணை செய்வது அவசியமாக இருக்கிறது. ஆகையால், அரசு தரப்பு 16-ஆம் சான்றாளரை மீண்டும் அழைத்து ஆணையிட வேண்டும்.

## எதிருரையின் சுருக்கம்

03. 16.06.2026-ஆம் தேதியன்று அரசு தரப்பு 16-ஆம் சான்றாளர் முதல்விசாரணையில் சாட்சியமளித்தார். அன்று மனுதாரரும் நீதிமன்றத்தில் தோன்றியிருந்தார். மனுதாரரின் வழக்குரைஞரும் நீதிமன்றத்தில் தோன்றி யிருந்தார். அவ்வாறான நிலையில் குறுக்குவிசாரணை செய்வதற்கு போதிய விவரங்கள் அல்லது அறிவுறுத்தல்கள் எதுவும் கிடைக்கவில்லை என்று மனுதாரர் சொல்வது பொய். அரசு தரப்பு 16-ஆம் சான்றாளரை குறுக்கு விசாரணை செய்வதற்கு மனுதாரருக்கு போதிய வாய்ப்பும் அவகாசமும்

இருந்தது. ஆனால் வேண்டுமென்றே குறுக்குவிசாரணை செய்யவில்லை. வழக்கு நடவடிக்கையை காலதாமதப்படுத்த வேண்டும என்ற நோக்கத்தில மனுதாரர் இருந்துவிட்டுத் தற்போது தாக்கல்செய்துள்ள இந்த மனு ஏற்புடையதல்ல. ஆகையால், மனுவைத் தள்ளுபடிச் செய்ய வேண்டும்.

## தீர்முடிவு

04. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் ஓர்வுசெய்யப்பட்டன. அரசு தரப்புச் சான்றாளர்கள் பட்டியலில் 21-ஆம் சான்றாளராக இருந்த இந்த வழக்கில் ஒரு சிறிய பகுதியை புலனாய்வுச் செய்த குமார் 16.06.2026-ஆம் நாளன்று அரசு தரப்பு 16-ஆம் சான்றாளராக சாட்சியமளித்தார். அவர் வழக்கில் இறந்துபோனவரின் சடலம்மீது பிரேத விசாரணை நடத்திச் சடலத்தைக் கூராய்வு செய்வதற்காக சட்டம் சார்ந்த மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்திருக்கிறார். சான்றாளர்களான வசந்தவேணி**(அ.சா-01),** பரமேஸ்வரன்**(அ.சா-02),** ரஞ்சித்குமார்**(அ.சா-03),** அர்சுணன் **(அ.சா-04)** ஆகிய சான்றாளர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்திருக்-கிறார். மனநலம் பாதிக்கப்பட்டவராக இருந்த எதிரி வடிவேலுவை அவரது மனைவி கலையரசி காவல் நிலையத்தில் ஒப்படைத்ததன்பேரில் கைது செய்திருக்கிறார். குமார்**(அ.சா-16)** முதல்விசாரணையில் 1-1/2 பக்கம் மட்டுமே சாட்சியமளித்தார்.

05. சான்றாளர் குமார்**(அ.சா-16)** சாட்சியமளித்தபோது மனுதாரர்/எதிரியும் அவரது வழக்குரைஞரும் நீதிமன்றத்தில் தோன்றியிருந்தனர். குறுக்கு விசாரணை செய்யுமாறு நீதிமன்றம் வலியுறுத்தியும் செய்யவில்லை. உரிய காரணம் குறிப்பிட்டுக் குறுக்குவிசாரணையை ஒத்திவைக்கக் கோரி மனு

எதுவும் தாக்கல்செய்யவில்லை. அதனால் இந் நீதிமன்றம் குறுக்கு விசாரணை செய்வதற்கான மனுதாரருக்கு இருந்த வாய்ப்பை முடித்து கடைசி சான்றாளரை விசாரிப்பதற்காக வழக்கை ஒத்திவைத்த நிலையில் மனுதாரர் இந்த மனுவைத் தாக்கல்செய்திருக்கிறார்.

**06.** குற்றவியல் வழக்குகளில் முதல்விசாரணை செய்யப்படும் அன்றே குறுக்குவிசாரணையும் செய்யப்பட வேண்டும் என்பதும் அதற்காக ஒத்தி -வைப்புகள் வழங்கக்கூடாது என்பதும் நன்கு நிறுவப்பட்ட சட்டவிதி ஆகும். சான்றாளர்களை மீண்டும் அழைக்கச் சட்டத்தில் வகையம் உள்ளது என்ற காரணத்திற்காகவே விதிவிலக்கான காரணம் எதுவும் இல்லாத நிலையிலும் சொல்லப்படாத நிலையிலும் 16.06.2026-ஆம் தேதியன்று அரசு தரப்பு 16 ஆம் சான்றாளரை மனுதாரர்/எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்யாமல் இருந்துவிட்டு தற்போது இந்த மனுவை தாக்கல்செய்துள்ளனர்.

**07.** சான்றாளர்களை வழக்குத் தரப்பினர்கள் நினைத்தநேரத்தில் மீண்டும் அழைத்து முதல்விசாரணையோ குறுக்குவிசாரணையோ செய்து-கொள்ளலாம் என்பது சட்டத்தின் நோக்கமல்ல. தரப்பினர்களின் கட்டுப் பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணங்களினால் முதல்விசாரணையோ குறுக்கு விசாரணையோ செய்யமுடியாத சூழ்நிலை இருந்தால்தான் சான்றாளர்களை மீண்டும் அழைக்க சட்டம் வகைசெய்கிறது. மனுதாரர் தரப்பில் வேண்டு மென்றே அரசு தரப்பு 16-ஆம் சான்றாளரை குறுக்குவிசாரணை செய்யாமல் இருந்துவிட்டு தற்போது தாக்கல்செய்துள்ள இந்த மனுவை அனுமதிக்க முகாந்திரம் இல்லை என்று இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

**இறுதிமுடிவு**

08. இறுதியாக, இந்த மனு தள்ளுபடிச் செய்யப்படுகிறது.

**இந்த ஆணையுரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட்திங்கள் 11–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

PUGAZHENTHI V Digitally signed by PUGAZHENTHI V
Date: 2026.08.11 19:04:07 +0530

**மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிபதி,**
**சேலம்.**

III rd ADJ Court, Salem